**ஹெலன்கோ ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் - 2022**

-----------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

ஹெலன்கோ ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் (“கம்பனி”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயப்பொருளின் வலியுறுத்தல்**

எனது அபிப்பிராயத்திற்கு முனைப்பழிவு இல்லாமல், நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதில் உள்ள தொடர்ந்து இயங்குதல் எடுகோள்கள் குறித்த நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 2.5 க்கு நான் கவனத்தை ஈர்க்கிறேன். எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்தில் கம்பனியைக் கலைக்க கம்பனியின் முகாமைத்துவம் முடிவு செய்திருக்கவில்லை. மற்றும் கம்பனியின் முகாமைத்துவமானது முன்னோக்கிச் செல்லும் வழியில் தேவையான வழிகாட்டுதல்களை தொடர்புடைய அமைச்சிடம் இருந்து நாடுகிறது. எனவே, கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்படும். எவ்வாறாயினும், கம்பனியின் இயக்குனர் சபை 2015 ஆம் ஆண்டு ஹம்பாந்தோட்டையில் ஹோட்டலை நிர்மாணிக்கும் திட்டத்தை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளது. இதன் விளைவாக, திட்டத்தினுடைய ஹோட்டல் கட்டுமான நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துள்ளன. மேலும் பொது நிர்வாக அபிவிருத்தி அமைச்சின் 2017 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 17/1613/733/029 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியினுடைய பங்குகளை கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டில் (தாய் கம்பனி) அவர்களின் பங்குகள் உள்ள விகிதத்தில் அதன் பங்குதாரர்களுக்கு மாற்றுவதற்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தது. இந்தத் திட்டம் அறிக்கைத் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2023 மார்ச் 14 ஆந் திகதிய 23/0431/604/046 ஆம் அமைச்சரவைத்தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவையானது கன்வில் ஹோல்டிங்ஸ் பிறைவேட் லிமிட்டடால் வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலும் லிற்றோ காஸ் லங்கா லிமிட்டட்டிலும் பேணப்பட்ட பங்குகளை உடனடியாக அமுலாக்கும் வகையில் பொதுதிறைசேரிக்கு மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல்இ தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள்இ செலவினங்கள்இ சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல்இ அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்இ தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும்இ தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால்இ அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில்இ நதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்இ எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல்இ கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்புஇ முறைமைகள்இ நடைமுறைகள்இ ஏடுகள்இ பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள்இ நடைமுறைகள்இ புத்தகங்கள்இ பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்இ

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்இ

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குதல் எண்ணக்கரு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியின் இயக்குனர் சபை 2015 ஆம் ஆண்டு ஹம்பாந்தோட்டையில் ஹோட்டலை நிர்மாணிக்கும் திட்டத்தை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளது. இதன் விளைவாக, திட்டத்தினுடைய ஹோட்டல் கட்டுமான நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துள்ளன. மேலும் பொது நிர்வாக அபிவிருத்தி அமைச்சின் 2017 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 17/1613/733/029 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியினுடைய பங்குகளை கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டில் (தாய் கம்பனி) அவர்களின் பங்குகள் உள்ள விகிதத்தில் அதன் பங்குதாரர்களுக்கு மாற்றுவதற்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தது. மேலும், 2023 மார்ச் 14 ஆந் திகதிய 23/0431/604/046 ஆம் அமைச்சரவைத்தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவையானது கன்வில் ஹோல்டிங்ஸ் பிறைவேட் லிமிட்டடால் வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலும் லிற்றோ காஸ் லங்கா லிமிட்டட்டிலும் பேணப்பட்ட பங்குகளை உடனடியாக அமுலாக்கும் வகையில் பொதுதிறைசேரிக்கு மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்தத் திட்டம் அறிக்கைத் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 சனவரி 17 இல் ஹெலன்கோ ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் இயக்குனர் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்துடன் கிறாண்ட் கியாட் பல்வகைப்படுத்தல் திட்டத்துடன் ஹெலன்கோ ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டினை பரவலாக்கல் இயக்குனர் சபையின் அபிப்பிராயமாகும். 2023 மார்ச் 14 இல் அமைச்சரவைத்தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவையானது கன்வில் ஹோல்டிங்ஸ் பிறைவேட் லிமிட்டட்டின் துணைக்கம்பனியாக ஹெலன்கோ ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் இருப்பதால் கன்வில் ஹோல்டிங்ஸ் பிறைவேட் லிமிட்டட்டினை அதன் இரண்டு துணைக்கம்பனியுடன் பல்வகைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. | அமைச்சரவையின் தீர்மானம் அமுல்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கம்பனியின் முக்கிய செயற்பாடு விருந்தோம்பல் வர்த்தகத்தில் ஈடுபடுவது மற்றும் ஹம்பாந்தோட்டை ஹயாட் ரீஜென்சி ஹோட்டலை சொந்தமாக வைத்திருப்பதாகும். கம்பனியின் இயக்குனர் சபை ஹம்பாந்தோட்டையில் நிர்மானிக்கும் திட்டத்தை நிறுத்துவதற்கு 2015 ஆம் ஆண்டு தீர்மானித்திருந்தது. இதன் விளைவாக அந்த ஹோட்டல் கட்டுமானப் பணிகள் முடிவுக்கு வந்தன. இருப்பினும் கம்பனி முன்னொக்கிச் செல்லும் வகையில் தேவையான உத்தரவுகளை தெடர்புடைய அமைச்சிடம் நாடுகின்றது.

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா.12,131,676 இலாபமாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா.11,875,894 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா.255,782 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. நிதி வருமானத்தில். ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாகவிருந்தது.

## 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான வருமானம் , நிர்வாக செலவினங்கள் மற்றும் தேறிய இலாபம் / (நட்டம்) ஆகியவற்றின் மாறுபாடுகள் மற்றும் வீதாசாரத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு என்பவற்றினுடைய பகுப்பாய்வு பின்வருமாறு.

| ஆண்டு | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|---|---|
| மொத்த வருமானம் ரூபா. | 20,638,644 | 20,044,189 | 21,624,281 | 39,142,280 | 49,770,092 |
| வருமான வளர்ச்சியின் வீதாசாரம்/ (குறைப்பு) | 3% | -7% | -45% | -21% | -44% |
| நிர்வாக செலவினங்கள் | 4,354,515 | 4,418,012 | 3,918,547 | 4,003,549 | 6,415,872 |
| நிர்வாக செலவினங்களின் வளர்ச்சியின் வீதாசாரம்/ (குறைப்பு) | 1% | 13% | -2% | -38% | -13% |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம் / (நட்டம்) | 12,131,676 | 11,875,894 | 13,456,358 | 25,299,887 | 31,848,469 |
| தேறிய இலாபத்தின் அதிகரிப்பு / (குறைவு) வீதாசாரம் | 2% | -12% | -47% | -21% | -50% |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கணக்காய்வுக்கு கிடைத்த நிதி அறிக்கைகள் மற்றும் தகவல்களின் படி கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான சில முக்கிய விகிதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|---|---|
| தேறிய சொத்தில் அதிகரிப்பு/(குறைவு) | 1.11% | 1.75% | 2.02% | 3.95% | 4.03% |
| நிதி வருமானத்தில் அதிகரிப்பு/(குறைவு) | 2.97% | -7.27% | -44.77% | 0.01% | 55.59% |
| ஒரு பங்கு ஈட்டிய இலாபம் ரூபா. | 0.24 | 0.24 | 0.27 | 0.51 | 0.64 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது முயற்சிகள் திணைக்களத்தின் உத்தரவின் படி, கம்பனி சினோலங்கா ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு 8.79% வட்டி வீதத்தில் சினோலங்கா ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டுடன் எந்த எழுத்து ஒப்பந்தமும் இல்லாமல் ரூபா.400 மில்லியன் (ரூபா.300 மில்லியன் 12 ஜனவரி 2018 இல் மாற்றப்பட்டது மற்றும் ரூபா.100 மில்லியன் 18 ஜனவரி 2018 இல் மாற்றப்பட்டது ) குறுங்கால கடனை வழங்கியிருந்தது. கம்பனி பெற வேண்டிய வட்டி ரூபா.126.07 மில்லியனை நிதியறிக்கையில் காட்டியிருந்தாலும் கூட இந்த தொகையானது சினோலங்கா ஹோட்டல் ரூ ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டினால் கணக்காய்வு திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | சினோலங்கா ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் இந்தக் கடனை திருப்பிச் செலுத்துவதற்கு நிதியங்களை கொண்டிருக்காததுடன் கிறாண்ட் ஹியாட் செயற்திட்டத்திடமிருந்து பிற்போடப்பட்ட பல்வகைப்படுத்தல் பெறுகைகளை பெற்றவுடன் வழங்கும் போது இருக்கின்ற வட்டிவீதத்தை சமரசம் செய்த பின்னர் கடன் தீர்க்கப்படும். | நிறுவனங்களுக்கு இடையேயான கொடுக்கல் வாங்கல்களுக்கு முகாமைத்துவம் சரியான கொள்கைகளை கொண்டிருக்க வேண்டும். |

### 3.2 செயலற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம் , பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி, 3.8 ஹெக்டெயர் நிலத்தை ரூபா.177.97 மில்லியன் முதலீட்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து குத்தகை அடிப்படையில் பெற்றது. எவ்வாறாயினும் அந்த நிலம் எந்த பயனுள்ள நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படவில்லை. | யூடிஏற்கு சொந்தமான நிலம் விளைவற்றிருந்தமையால் திட்டமிடப்பட்ட ஹியாட் றிஜென்சி ஹம்பாந்தோட்டை செயற்திட்டம் எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. முன்னெடுத்து செல்வதற்காக எமக்கு வழங்கப்பட்ட சட்டக் கருத்துக்களுடன் வரிசை அமைச்சிற்கு சில கருத்துக்கள் அனுப்பப்பட்டிருந்தபோதும் நாங்கள் இன்னும் சாதகமான பதில்களை பெறவேண்டியுள்ளதுடன் இயக்குனர் சபை இது தொடர்பில் உடன்படிக்கையொன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன் சபையானது கிறாண்ட் கியாட் செயற்திட்டத்துடன் இணைந்து பல்வகைப்படுத்தலுடன் செயற்படுத்துவதற்கு 2023 சனவரியில் கலைந்திருந்தது. | முகாமைத்துவம் இந்தச் சொத்தை உத்தேசித்த நோக்கத்திற்காகவோ அல்லது வேறு ஏதேனும் பயனுள்ள நோக்கத்திற்காகவோ பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயற்றிட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்தால் வருடாந்த செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருந்திருக்கவில்லை. | நிர்மாண நடவடிக்கைகளை செயற்படுத்தாமையால் வருடாந்த திட்டமொன்று இருக்காததுடன் வழிகாட்டல்கள் முன்மொழியப்பட்டிருக்கவில்லை. காணியைப் பாதுகாப்பதற்கு பிணை உத்தியோகத்தர் வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் கட்டணங்களும் செலுத்தப்பட்டிருந்தது. இந்தக் கம்பனி தொடர்பில் எந்த நடவடிக்கைகளுமோ உத்தியோகத்தர்களுமோ வேலைக்கமர்த்தப்பட்டிருக்கவில்லை. | கம்பனி அதன் வருடாந்த செயல்திறன் இலக்குகளை அடைய ஒரு செயல் திட்டத்தை தயாரித்து செயல்படுத்த வேண்டும். |